வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. [illegible]/-


# ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 13.06.2026 சனிக்கிழமை இதழ் : 158 பக்கங்கள் : 08

# சமூக மாற்றப் பாடல்களை மட்டும் பாடவேண்டும் பாடகர் சங்கீத்சன்!

### அமைச்சர் சந்திரசேகர் ஆலோசனை



கொழும்பு, ஜூன். 13

கிளிநொச்சியைச் சேர்ந்த பிரபல மெல்லிசைப் பாடகர் சங்கீத்சன் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பாடகர் சங்கீத்சன் தொடர்ந்து சமூக மாற்றத்தை நோக்கிய எழுச்சிப் பாடல்களைப் பாட வேண்டும் என வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்த விசேட அறிவிப்பை விடுத்தார்.

கடந்த ஒரு வார காலமாக நாட்டில் விசேடமாகப் பேசப்பட்டு வந்தவரும், அரசியல் ரீதியாகப் பலராலும் பயன்படுத்தப்பட்டு வந்தவருமான பாடகர் சங்கீத்சனின் விடுதலை, சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் மூலமாகவே சாத்தியமாகியுள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், சங்கீத்சனின் கைது விவகாரத்தை வைத்து சுயலாபம் தேட முயன்ற அரசியல்வாதிகளை வன்மையாகச் சாடினார்.

இது குறித்து அவர் பேசுகையில்:

சங்கீத்சன் கைது செய்யப்பட்ட பின்னர், அவரது தாயார் அடைந்த வேதனையை என்னோடு பகிர்ந்து கொண்டார். தந்தை இல்லாத அந்த குடும்பத்தில், சந்தையில் வியாபாரம் செய்து மிகவும்

07

# இராணுவமே வெளியேறு!

### வலி. வடக்கில் நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன். 13

வலி. வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி, காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் அதிகாரிகள் பங்களா முன்பாக நேற்று எட்டாவது வெள்ளிக்கிழமை போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வலி. வடக்கில் 249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத காலப் பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகின்றது.

07



# உள்ளூராட்சிமன்றங்களை முடக்கும் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம்

### கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன். 13

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை விரைவாக நடத்துவதற்கு மறுப்பு தெரிவிக்கும் அதேவேளை, வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் எதிர்க்கட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளை முடக்குவதற்கும் செயற்பாட்டக்கு வட மாகாண ஆளுநரின் அலுவலகத்தை அரசாங்கம் பயன்படுத்துகிறது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின்

07

# சொல்லிசை பாடகரை பிணையில் விடுவித்தது சாவகச்சேரி நீதிமன்று!

யாழ்ப்பாணம், ஜூன். 13

சொல்லிசை பாடகர் சங்கீத்சனை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதவான் நீதிமன்று நேற்று அனுமதித்தது.

சாவகச்சேரிப் பகுதியில் உள்ள ஆலயத்தில் இடம்பெற்ற இசை நிகழ்வில், பாடலைப் பாடி, அந்த பாடலுக்கு தனது இசைச் சேர்க்கையில் உருவான சொல்லிசை பாடலை இணைத்து சமூக ஊடகங்களில் கிளிநொச்சியை ச்சேர்ந்த சொல்லிசை கலைஞன் சங்கீத்சன் பகிர்ந்திருந்தார்.

அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கடந்த 2ஆம் திகதி இளைஞனை கைது செய்து விசாரணைகளின் பின், மறுநாள் 03ஆம் திகதி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சாவகச்சேரி

07

# தெற்கில் அரசியல் ஆதரவை பெறவே வடக்கில் அரசாங்கம் கைது நாடகம்!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம்



வவுனியா, ஜூன். 13

தமிழ் பாடகர் சங்கீத்சன் கணேஷ்குமாரை உடனடியாக விடுவிக்க அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ தலையிடவேண்டும் என்று கோரியுள்ள தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம், தெற்கில் அரசியல் ஆதரவை பெறவே வடக்கில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளதாகவும் கூறியுள்ள்ளது.

இந்தக் கைதுக்கு எதிராக வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே காணாமற்போனோரின் உறவுகள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச்

07

# செம்மணி புதைகுழியிலிருந்து புதிதாக 12 மனித எலும்புக்கூடுகள் அடையாளம்!

யாழ்ப்பாணம், ஜூன். 13

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து நேற்று புதிதாக 12 மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அத்துடன் நேற்று 7 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

செம்மணி மனித புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் 23ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதுவரை 334 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# போராடியவர்களுக்கு நன்றி!

### பிணையில் வெளி வந்த சங்கீத்சன்



யாழ்ப்பாணம், ஜூன். 13

எனது விடுதலைக்காக போராடிய அனைத்து தரப்பினருக்கும் நன்றிகள் எனச் சொல்லிசைப் பாடகர் கணேஸ் குமார் சங்கீத்சன் தெரிவித்துள்ளார்.

எழுச்சிப் பாடல்களை பாடினார் எனும் குற்றச்சாட்டில்

07

# சாலேயின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசம்!

### குடும்ப உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 13

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலேயின் ஆரோக்கிய நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாக அவரது குடும்ப உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முற்பகல் அவரது நலன் குறித்துக் கேட்டறிந்த பின்னர் ஊடகங்களிடம் பேசிய உறவினர்கள்,

அவரது உடல்நிலை தொடர்ந்து

07

# வடமராட்சிக்குத் தனியொரு தீயணைப்பு பிரிவு விரைவில்!

யாழ்ப்பாணம், ஜூன். 13

வடமராட்சி பகுதிக்கு தீயணைப்பு பிரிவொன்றை ஆரம்பிப்பது தொடர்பில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பிரதேச மக்களுக்கு ஒருங்கிணைந்த சேவைகளை வழங்குதல் தொடர்பாக, வடமராட்சி பகுதியில் உள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களையும், ஒன்றிணைத்து முதற்கட்ட கலந்துரையாடல் நேற்று முன் தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாண சபைத் தேர்தல் குறித்து பிரதமரின் நிலைப்பாடு மாற்றம்!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன். 13

எதிர்க்கட்சியில் இருக்கும் போது பழைய தேர்தல் முறையிலாவது மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டும் என்று குறிப்பிட்ட பிரதமர் ஹரிணி அமரசூரிய, தற்போது பழைய தேர்தல் முறையில் தேர்தலில் தேர்தலை நடத்த முடியாது என்று குறிப்பிடுகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

பழைய முறையோ,புதிய முறையோ எந்த முறையிலாவது மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறோம்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை எந்தளவுக்கு உள்ளது என்பதை அறிந்துக் கொள்ளலாம்-என்றார். (அ)

# சித்திரவதைகள் தடுப்புக்கான ஐ.நா. குழு இலங்கை வருகிறது!

கொழும்பு, ஜூன். 13

ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைத் தடுப்புக்கான துணைக்குழு எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை இலங்கைக்குத் தனது இரண்டாவது பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிகார அமைச்சு அறிவித்துள்ளது.

2017 டிசம்பரில் சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கையின் விருப்பத்தேர்வு நெறிமுறையில் இலங்கை இணைந்ததைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைத் தடுப்புக்கான துணைக்குழு 2019 ஏப்ரலில் தனது முதல் பயணத்தை மேற்கொண்டது.

இணைந்தவுடன், இலங்கை அரசாங்கத்தால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தேசிய தடுப்புப் பொறிமுறையாக நியமிக்கப்பட்டது.

இந்த பயணத்தின்போது, நான்கு பேர் கொண்ட தூதுக்குழுவினர் அமைச்சர் மட்டத்திலான சந்திப்புகளை நடத்துவதோடு, தொடர்புடைய அரசாங்க அமைச்சகங்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் மூத்த அதிகாரிகளுடனும் கலந்துரையாடுவார்கள்.

இத்தூதுக்குழுவினர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளையும், சிவில் சமூக உறுப்பினர்களையும் சந்திப்பார்கள். (அ)

# போதைப்பொருள் பாவித்த பத்து பஸ் சாரதிகள் கைது!

கொழும்பு, ஜூன். 13

போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் மற்றும் ஹொரணை பொலிஸார் இணைந்து, ஹொரணை நகரிலிருந்து பயணிக்கும் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சாரதிகளை இலக்கு வைத்து நடத்திய விசேட போதைப்பொருள் சோதனை நடவடிக்கையின்போது, போதைப்பொருள் பாவித்ததாக சந்தேகிக்கப்படும் 10 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், போதைப்பொருள் பாவனையுடன் வாகனங்களைச் செலுத்துவதைத் தடுக்கும் நோக்கிலும் இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தவிசேட நடவடிக்கையின்போது, ஹொரணை நகரிலிருந்து பல்வேறு பகுதிகளுக்குச் பயணிக்கும் 150 பஸ்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், அவற்றில் 10 சாரதிகள் போதைப்பொருள் பாவித்துள்ளமை ஆரம்பக்கட்ட சோதனைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# கடற்பரப்புகளுக்கு சிவப்பு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன். 13

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கற்பிட்டி வரையான கடற்பரப்புகளுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் பலத்த காற்று மற்றும் கொந்தளிப்பான கடல் நிலை குறித்த "சிவப்பு" மட்ட எச்சரிக்கையை விடுத்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட இந்த அவசர எச்சரிக்கை, இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கற்பிட்டி வரையான கடற்பரப்புகளில் காற்று அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60-70 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும்.

இதனால் இக்கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும். கடற்படை மற்றும் மீனவ சமூகங்கள் மறு அறிவித்தல் வரும் வரை இந்த கடற்பரப்புகளுக்குள் கடல் தொழிலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளும், கற்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் பலத்த காற்றினால் கொந்தளிப்பாகக் காணப்படும்.

மன்னாரிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகளின் உயரம் சுமார் 2.0 முதல் 2.5 மீற்றர் வரை உயரக்கூடிய சாத்தியம் உள்ளது. என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வருண ஜயசுந்தரவை கைது செய்யும் தீர்மானம் தற்போதைக்கு கிடையாது!

## நீதிமன்றில் சட்ட மா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன். 13

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தரவைக் கைது செய்வதற்கோ அல்லது தடுத்து வைப்பதற்கோ இந்த கட்டத்தில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை என சட்ட மா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு நேற்று அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் நியாயமான காரணங்களின்றி தம்மைக் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி, வருண ஜயசுந்தரவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு இந்த விவரத்தை உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளார்.

# நீங்கள் குற்றமற்றவர் எனில் எதற்காக உண்ணாவிரதம்?

## சாலேயிடம் கேட்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன். 13

"நீங்கள் குற்றமற்றவர் எனில் நீதிமன்றம் ஊடாக அதனை நிரூபித்துக்காட்டுங்கள். மாறாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு பயன் இல்லை." என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியமக்கள் சக்தி, சுரேஷ் சாலேயிடம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் கூறியவை வருமாறு-

சஹ்ரான் குழுவினருக்கு எவரேனும் உதவி இருந்தால் அவர்களுக்கு எதிராகவும் நிச்சயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அவ்வாறு இல்லையேல் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை தொடரவேண்டும். சூத்திரதாரிகள் யாரென்பது குறித்து நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்தப்படவேண்டும். உரிய வகையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

தான் குற்றமற்றவர் எனில் சுரேஷ் சாலே அஞ்சவேண்டியதில்லை. நீதிமன்றத்துக்குச் சென்று தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க வேண்டும். இதைத் தான் அவர் செய்ய வேண்டும். அதனைவிடுத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவது பயனற்ற விடயமாகும்.

சுரேஷ் சாலே, புலனாய்வுப் பிரிவின் பிரதானியாக இருந்த போது ரிஷாத் பதியுதீன் உட்பட சிலரை கைது செய்து, அவர்கள் தான் சூத்திரதாரியென கூறமுயன்றார். அவர்கள் உண்ணாவிரதம் இருக்கவில்லை. நீதிமன்றம் சென்று, சட்டத்தரணிகள் ஊடாக தாம் குற்றம் அற்றவர்கள் என்பதை நிரூபித்தனர்-என் றார். (அ)

# கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்கு ஆறு குளிரூட்டப்பட்ட வாகனங்கள்!

## வழங்கினார் ஜப்பானியத் தூதுவர்

கொழும்பு, ஜூன். 13

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசொமதா, மீன்வளம், நீர்வாழ் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் முன்னிலையில், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் முகமது நவ்ராஸ் நசாரிடம் ஆறு குளிரூட்டப்பட்ட வாகனங்களைக் கையளித்தார்.

இந்த உதவி, ஜப்பான் அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் 200 மில்லியன் ஜப்பானிய யென் (ஏறத்தாழ 1.25 மில்லியன் அமெரிக்க டொலர்) மொத்த மதிப்புள்ள மானிய உதவித் திட்டமான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இலங்கையின் குளிர்பதனச் சங்கிலித் திறனை மேலும் வலுப்படுத்தும் வகையில், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் திருகோணமலையில் மூன்று பனிக்கட்டி தயாரிக்கும் இயந்திரங்களை வழங்குவதும் இத்திட்டத்தில் அடங்கும்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்ட ஆறு குளிரூட்டப்பட்ட வாகனங்கள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து கொழும்புக்கு கடல் பொருள்களைக் கொண்டு செல்வதற்காக இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தால் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# ஆறு மாதங்களில் மட்டும் நீரில் மூழ்கி 122 பேர் பலி!

கொழும்பு, ஜூன். 13

பொலிஸ் தரவுகளின்படி, 2026ஆம் ஆண்டில் இதுவரையிலான காலப்பகுதியில் மாத்திரம் இலங்கையில் நீரில் மூழ்கி 122 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஃப்.யு. வூட்லர், இவ்வாறு உயிரிழந்தவர்களில் 113 ஆண்களும் 09 பெண்களும் அடங்குவதாகக் குறிப்பிட்டார்.

மேலும், கடந்த 2024 ஆம் ஆண்டில் 510 ஆண்கள் மற்றும் 85 பெண்கள் உட்பட 595 உயிரிழப்புகளும், 2025ஆம் ஆண்டில் 309 ஆண்கள் மற்றும் 67 பெண்கள் உட்பட 376 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் கூற்றுப்படி, 2024 ஆம் ஆண்டு முதல் 2026ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நீரில் மூழ்கியதால் மொத்தம் 1,093 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. இவ்வாறு உயிரிழந்தவர்களில் பெரும்பாலோர் இளைஞர்கள் என தெரியவந்துள்ளது.

எனவே, விடுமுறை நாள்களிலும், குறிப்பாக வரவிருக்கும் பொசன் பண்டிகைக் காலத்திலும் நீர்நிலைகளுக்கு அருகில் செல்லும் பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் குறித்து பெற்றோர்கள் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வலியுறுத்தியுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
13.06.2026 சனிக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# பாராளுமன்றத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் உறுப்பினர்களின் செயற்பாடுகள்

பாராளுமன்றத்தில் வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் விடயத்துக்கு பொருத்தமில்லாத உரை களை நிகழ்த்துவது ஒரு வழமையாக மாறிவிட்டது.

பாராளுமன்ற விவாதங்களை நேரலையில் தொலைக் காட்சிகளில் பார்ப்பவர்கள் தமிழ் கட்சிகளின் உறுப்பினர்களின் உரைகளைக் கேட்கும் போது சபையில் தமிழ் மக்களின் கடந்த கால ஆயுதப் போராட்டங்களையும் அவற்றுக்கு தலைமை தாங்கியவர்களையும் பற்றி அடிக்கடி விவாதிக் கப்படுகிறதோ என்று நினைத்தால் அவர்களை தவறாக நினைக்க முடியாது.

கடந்த காலப் போராட்டங்களை நினைவு கூருவதற்கும் ஆயுதப் போராட்டத் தலைவர்களைப் பற்றி பேசுவதற்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தங்கள் நேரத்தைச் செலவிடுகிறார்கள். குறிப்பிட்ட தினத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படும் சட்ட மூலங்களை அல்லது பிரேரணைகளைப் பற்றி ஆக்கபூர்வமாகப் உரை நிகழ்த்துவதாக இருந்தால், அதற்கு அவர்கள் தங்களை முன்கூட்டியே தயார்படுத்த வேண்டும். அதற்காக சிரமப்படுவதை தவிர்ப்பதற்காகவும் சில உறுப்பினர்கள் சபைக்கு வெளியில் தங்களது வாக் காளர்களை உணர்ச்சிவயப்படுத்தக்கூடியதாக உரைகளை நிகழ்த்துகிறார் களோ தெரியவில்லை.

இவர்கள் இவ்வாறு செய்வது தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகள், உரிமைகள் மற்றும் அதிகாரப்பகிர்வுக் கோரிக்கைகளை இன்னமும் கூட பிரிவினைவாதமாகச் சித்தரிக்க பெரும்பான்மைத் தேசியவாதக் குழுக்களுக்கு வழிவகுத்துக் கொடுக்கிறது என்கிற அதேவேளை, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச புவிசார் அரசியல் நிலைவரங்களுக்கு இசைவான முறையில் நகர்த்துவதற்கு எதிர்கால அரசியல் திட்டத்தை முன்வைப்பதற்கு பதிலாக, மக்களை கடந்த காலத்துடன் பிணைத்து வைத்து உணர்ச்சிகளைத் தூண்டும் கருத்துக்களை பேசுவதிலேயே காலத்தைக் கடத்துகிறார்கள் என்ற விமர்சனம் தமிழ்ச் சமூகத்திற்குள் ளேயே வலுவடைந்து வருகிறது.

வடக்கு, கிழக்கில் மக்கள் பாரதூரமான பொருளாதாரச் சவால்களை எதிர்நோக்குகிறார்கள். இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்பின்மை யினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நுண்கடன் சுமை மற்றும் உட்கட்டமைப்புக் குறைபாடுகள் என்று பல பிரச்சினைகளை அந்த மக்கள் எதிர்நோக்குகிறார்கள். அவற்றையெல்லாம் தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

வளர்ந்துவரும் புதிய தலைமுறையினர் வரலாற்று நினைவுகளை மதிக்கின்றவர்களாக இருக்கின்ற அதேவேளை, நடைமுறைச் சாத்தியமான சமூகப் பொருளாதார முன்னேற்றத்தில் பெருமளவுக்கு அக்கறை கொண்ட வர்களாகவும் இருக்கிறார்கள். கடந்த காலத்தில் இருந்து படிப்பினைகளைப் பெற்று இந்த தலைமுறையினர் நடைமுறைச் சாத்தியமான புதிய பாதையில் பயணிப்பதற்கு வழிகாட்ட வேண்டிய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாறாக அவர்களை கடந்த காலத்தில் வாழ வைக்கும் பயன்தராத பாதைக்கு இழுத்துச் செல்ல முயற்சிக்கிறார்கள். இதனால் இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் நாளடைவில் தமிழ் மக்களிடமிருந்து முற்றாக தனிமைப்படக் கூடிய ஆபத்து இருக்கிறது.

# விசாரணைகளும் அரசியலும்



ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் குறித்து அரசாங்க அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். முக்கிய பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கும் ஊடகங்களில் தலைப்புச் செய்திகளை உருவாக்குவதற்கும் அவர்கள் வழக்கமாக பாராளுமன்றத்திலும் ஊடகவியலாளர் சந்திப்புகளிலும் இவ்வாறு செய்கிறார்கள்.

2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இந்த கொடூரமான குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சதியில் அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேவுக்கு உள்ள தொடர்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான போதுமான ஆதாரங்களை புலனாய்வாளர்கள் திரட்டியுள்ளனர் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஏனைய ஜே.வி.பி/ தேசிய மக்கள் சக்தி அரசியல்வாதிகளும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் (சி.ஐ.டி.) ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத விசாரணை குறித்து “முன்னோட்டக் கருத்துக்களை” வெளியிட்டு வருகின்றனர். இது, விசாரணைகளின் முடிவு அரசாங்கத்திற்கு முன்கூட்டியே தெரியுமோ என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புகளில் சாலேவுக்குத் தொடர்பு இருந்தது என்ற குற்றச்சாட்டு இன்னும் நிரூபிக்கப்படாத ஒன்றாகவே உள்ளது. ஆனால், அரசாங்க அரசியல்வாதிகள் இந்த பயங்கரவாதத் தாக்குதல் விசாரணைகள் குறித்துக் கூறும் கருத்துக்களைப் பார்க்கும் போது, விசாரணையின் நேர்மைத்தன்மையைப் பாதுகாப்பதற்காக பொலிஸார் இரகசியமாக வைத்திருக்க வேண்டிய தகவல்களை அவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

குற்றப் புலனாய்வாளர்கள் இத்தகைய தகவல்களை அரசியல்வாதிகளுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமற்ற செயலாகும். அரசியல்வாதிகள் இதனைத் தங்களது அரசியல் பிரச்சாரங்களுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

சாலே தனது தனிப்பட்ட கணினி மற்றும் கைப்பேசிக்கான கடவுச்சொற்களை (passwords) வழங்க மறுத்துவிட்டார் என்றும் அமைச்சர் விஜேபால தெரிவித்துள்ளார். சாலேயின் இந்த ஒத்துழையாமை, விசாரணை செயல்முறைக்கு முட்டுக்கட்டை போடும் ஒரு முயற்சி என அவர் விவரித்தார். தான் தீவிர கண்காணிப்பில் இருப்பதை நன்கு அறிந்திருந்த ஒரு முன்னாள் புலனாய்வுத் தலைவர், தனக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய எந்தவொரு தகவலையும் தனது கைப்பேசியிலோ அல்லது தனிப்பட்ட கணினியிலோ சேமித்து வைத்திருப்பார் என்று எதிர்பார்ப்பது ஏமாளித்தனம் அல்லவா?

மறுபுறம், இன்றைய காலகட்டத்தில் கடவுச்சொல் மூலம் பாதுகாக்கப்பட்ட கணினிகள் மற்றும் தொலைபேசிகளை அணுகுவது மிகவும் எளிதான ஒரு காரியமாகும்

ஒருவர் மீதான தீவிரமான குற்றச்சாட்டை நிரூபிப்பது என்பது சில காலமே ஆகும் என்றும் சில உயர் மட்டக் கைதுகள் விரைவில் இடம்பெறவுள்ளன என்றும் ஆளுங்கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பகிரங்கமாக அறிவிக்கும் போது, அவர்களின் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் ஒருவரால் வழிநடத்தப்படும் புலனாய்வாளர்கள் தங்களது அரசியல் தலைவர்களின் கூற்றுகளுக்கும் பொது அறிக்கைகளுக்கும் சவாலாக அமையக்கூடிய முரணான ஆதாரங்களை எப்படிக் கணக்கில் எடுத்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியும்?

தங்களது அரசியல் தலைவர்களை சங்கடத்திற்குள்ளாக்கக் கூடாது என்பதற்காகவும் அரசியல் எதிரிகளுக்கு வாய்ப்பாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காகவும் எல்லாவற்றிற்கும் மேலாக, தாங்கள் பதவிகளை இழந்துவிடக்கூடாது என்பதற்காகவும் புலனாய்வாளர்கள் அத்தகைய ஆதாரங்களை மறைக்க நிர்ப்பந்திக்கப்பட மாட்டார்களா?

பொலிஸார் தங்களது சொந்த முற்கற்பிதங்களுக்கு பலியாகி, ஆதாரங்களைத் தங்களுக்குச் சாதகமாகத் தேர்ந்தெடுத்து, முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட முடிவை நோக்கி விசாரணைகளைக் கொண்டு சென்றதற்கான ஏராளமான உதாரணங்கள் உள்ளன.

பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜூதீனின் மரணம் ஒரு கார் விபத்தினால் தான் ஏற்பட்டது என்ற கோட்பாட்டிற்கு ஏற்ப, ஆரம்பக்கட்ட பொலிஸ் விசாரணை தகவல்களைப் பொருத்தியமை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்த நாட்டில், பொலிஸ் அதிகாரிகள் உண்மை, நீதி மற்றும் நேர்மைக்காக அதிகாரத்தில் உள்ளவர்களை எதிர்த்து நிற்பதில்லை மாறாக, அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகளுக்கு முன்னால் கைகட்டி மரியாதையுடன் நிற்கிறார்கள்.

கடந்த 2016ஆம் ஆண்டு, அப்போதைய பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஒரு பொதுக் கூட்டத்தில் இருந்தபோது, தொலைபேசியில் அழைத்த ஒருவரை “சேர்” என்று மிகுந்த மரியாதையுடன் அழைத்து, குறிப்பிட்ட ஒரு நபர் கைது செய்யப்படமாட்டார் என்று உறுதியளித்தது கமராவில் சிக்கியதை எவரும் நினைவு கூரலாம்.

இத்தகைய கீழ்ப்படியும் குணம் நிறுவன ரீதியாகப் பரவக்கூடியது. மீன் எப்போதும் தலையிலிருந்துதான் அழுகத் தொடங்கும் என்று கூறுவார்கள்.

நல்லாட்சி காலத்தில், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்) ஷானி அபேசேகர மற்றும் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க ஆகியோருக்கு இடையிலான தொலைபேசி உரையாடலின் ஒலிப்பதிவு இன்னமும் இணையத்தில் உள்ளது. அதில் ஒரு விவகாரம் தொடர்பாக ராமநாயக்கவின் சமையலறையில் பாத்திரங்களைக் கழுவிக் கொடுப்பதற்குக் கூடத் தான் தயாராக இருப்பதாக அபேசேகர கூறுவது கேட்கிறது.

275 க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலி கொண்டு, மேலும் பலரைத் தீவிரமாகக் காயப்படுத்திய ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

ஆனால், ஒரு அரசாங்கம் தனது சொந்தக் கட்சியின் ஓய்வுபெற்ற உறுப்பினர்களை மீண்டும் பணிக்கு அழைத்து, பொலிஸ் மற்றும் பொதுப் பாதுகாப்புத் துறைகளில் முக்கிய பதவிகளை வழங்கி, உயர் மட்டக் குற்றவியல் விசாரணைகளை நடத்துவதற்கு அவர்களை நியமித்து, முறைப்படியான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதற்கு முன்பே சந்தேகநபர்களை குற்றவாளிகள் என அறிவிக்கும் போது இந்த உலகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது?

எல்லாவற்றிற்கும் மேலாக, அரசாங்கத்தின் தலைவர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சந்தேக நபர்களைக் கைது செய்ய உத்தரவிடுவதோடு, நீதிமன்றத் தீர்ப்புகளையும் துல்லியமாகக் கணிக்கிறாரே?

குற்றப் புலனாய்வாளர்களின் அரசியல் சார்புகளும் தப்பெண்ணங்களும் அவர்கள் நடத்தும் விசாரணைகளின் நேர்மைத்தன்மையை முற்றாகச் சீர்குலைத்துவிடும்.

(தி ஐலண்ட் ஆசிரிய தலையங்கம், 12 ஜூன் 2026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**இடபம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். வாகனத்தை இயக்கும் போது அலைப்பேசியில் பேச வேண்டாம். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டும்.

**மிதுனம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல்கள் செய்ய உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்கள் அறியாமலே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். பொறுமை தேவைப்படும்.

**துலாம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உதவுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**விருட்சிகம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பணப் புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**தனுசு**
நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**மகரம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் நிம்மதி கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மீனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய பாதை தெரியும்.

# குளங்களை தூர்வாரும் திட்டம் ஜூலை மாதம் முதல் ஆரம்பம்!

## வடக்கு ஆளுநர் தலைமையில் தீர்மானம்

*யாழ்ப்பாணம், ஜூன். 13*

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குளங்களைத் தூர்வாரும் செயல்றிட்டத்தை, இந்த ஆண்டு எதிர்வரும் ஜூலை மாதத்தில் மீள ஆரம்பிப்பதற்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குளங்களைத் தூர்வாருவது தொடர்பான இந்த விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கடந்த ஆண்டு கந்தரோடைக் குளத்தில் முன்னெடுக்கப்பட்ட தூர்வாரும் செயற்றிட்டத்தின் மூலம் ஏற்பட்ட சாதகமான விளைவுகள் குறித்தும், அச்செயற்றிட்டத்தை முன்னெடுக்கும்போது எதிர்கொண்ட சவால்கள் தொடர்பிலும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இந்த ஆண்டு குளங்களைத் தூர்வாரும் செயற்றிட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பில், ஆளுநர் செயலகத்தில் ஏற்கனவே நடைபெற்ற கலந்துரையாடலில் கமநல சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சாதகமான கருத்தை வெளிப்படுத்தியிருந்தமையை ஆளுநர் இங்கு நினைவுகூர்ந்தார். அதற்கமைவாக, இந்த ஆண்டு கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாகத் தூர்வாரப்பட வேண்டிய குளங்களை அடையாளப்படுத்தி, அவற்றுக்கான அனுமதிகளை விரைவாகப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வழுக்கையாற்றுப் பகுதியிலுள்ள குளங்களைத் தூர்வாருவதற்கும், அந்தச் செயற்பாடுகளைச் சம்மந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக முன்னெடுப்பதற்கும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைவாக, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் தலைமையில், நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம், பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் விசேட கலந்துரையாடலொன்றை நடத்தி, இத்திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

மேலும், கமநல சேவைகள் ஆணையாளர் நாயகத்தால் ஏற்கனவே அனுமதிகள் வழங்கப்பட்ட சில குளங்களின் தூர்வாரும் பணிகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கு வசதியாக, நில அளவைத் திணைக்களத்தின் முழுமையான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கும் ஆளுநரால் இதன்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கமைவாகக் களப்பணிகளை மிக விரைவாக ஆரம்பிக்கவும் இணக்கம் காணப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர், விவசாய அமைச்சின் செயலாளர், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளர், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாண மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் மற்றும் குளங்களைத் தூர்வாரும் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் தன்னார்வலர்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (அ)


# நேரியகுளம் கிராம அலுவலர் அலுவலகத்தில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள உடுபுடைவைகள்!

*வவுனியா, ஜூன். 13*

செட்டிகுளம், நேரியகுளம் பகுதியில் மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்ட புடைவைகள் விநியோகம் செய்யப்படாமல் கிராம அலுவலர் அலுவலகத்தில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்புட்ட நேரியகுளம் கிராம மக்களால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய செட்டிகுளம் பிரதேச சபை உப தவிசாளர் சிவானந்தராசா உறுப்பினர்களான சங்கரன் சசிகுமார், திவைக்சன், அலெக்ஸ் யூட் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் நேரியகுளம் கிராம அலுவலர் அலுவலகத்தில் சென்று பார்வையிட்டபோது ஒரு தொகை புடைவைகள் மீட்கப்பட்டுள்ளன.

மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்படவேண்டிய புடைவைகள், வேட்டிகள் என்பன மக்களுக்கு வழங்கப்படாது நீண்ட காலமாக அறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந் தமை இதன்போது தெரிய வந்துள்ளது. அவை பெட்டிகளிலும், மூடை களிலும் பொதி செய்யப்பட்ட நிலையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன.



இது தொடர்பாக உடனடியாக அப்பகுதிகிராம அலுவலரைத் தொடர்பு கொண்டு, சம் பவ இடத்துக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு கோரிய போதிலும், அவர் அந்த இடத்துக்கு வருகை தரவில்லை என செட்டிகுளம் பிரதேச சபை உப தவிசாளர் தெரிவித்தார்.

சமீபத்தில் நிலவிய "டித்வா" புயல் நிவாரணப் பணிகளின் போது, செட்டிகுளம் பிரதேசத்தின் சில கிராம அலுவலர்கள் ஊழல் மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய சூழலில், கிராம அலுவலர்களுக்குமான உள்ளக இடமாற்றங்கள் தற்போது இடம்பெற்று வரும் வேளையில் இந்த ஆடைகள் பல மாதங்களாக தேக்கி வைக்கப்பட்டிருந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக செட்டிகுளம் பிரதேச செயலாளரிடம் வினவிய போது, இந்த விவகாரம் அல்லது பொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளமை குறித்து தனக்கு எதுவுமே தெரியாது என கூறினார். (அ)

# நெடுந்தீவில் மீன் பிடிக்கச் சென்றவர் படகில் இருந்து தவறி விழுந்து மாயம்!

*யாழ்ப்பாணம், ஜூன். 13*

நெடுந்தீவில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளி ஒருவர் கடல் சீற்றம் காரணமாக படகில் இருந்து தவறி கடலுக்குள் விழுந்த நிலையில் காணாமற்போயுள்ளார்.

நெடுந்தீவில் இருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கடற்தொழிலுக்காக இரண்டு இளைஞர்கள் படகொன்றில் கடலுக்கு சென்றுள்ளனர்.

தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை கடல் சீற்றம் காரணமாக படகில் இருந்து ஒருவர் தவறி கடலுக்குள் விழுந்து காணாமற்போயுள்ளார். இதனை அடுத்து மற்றையவர் ஏனைய தொழிலாளிகளுக்கு அறிவித்த நிலையில் அவர்கள் தமது படகுகளில் அப்பகுதிக்கு விரைந்து தேடுதல் நடத்திய போதிலும் காணாமற்போன தொழிலாளியை மீட்க முடியவில்லை.

நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் காணாமற்போன கடற்தொழிலாளியை சக தொழிலாளிகள் தேடி வருகின்றனர்.

# புற்றளை முன்பள்ளி விளையாட்டு விழா

*வடமராட்சி, ஜூன். 13*

புலோலி புற்றளை முன்பள்ளி விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை புற்றளை சித்தி விநாயகர் ஆலய முன்றலில் காலை 9 மணிக்கு முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் சண்முகநாதன் தனஞ்செயன் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி கல்விவலய கல்வி அபிவவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் மோனசுந்தரம் தெய்வேந்திரா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (அ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மீது நேற்று அதிகாலையில் மின்னல் தாக்கம்!

## அவசரமாக கட்டுநாயக்காவில் தரையிறக்கம்

கொழும்பு, ஜூன். 13

சிட்னி நோக்கிப் பயணித்த சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் ஒன்று, புறப்பட்ட சிறிது நேரத்திலேயே மின்னல் தாக்கியதையடுத்து, கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு மீண்டும் அவசரமாகத் திரும்பியதாக விமான நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.



சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் யு.எல்.-606 எனும் இந்த விமானம், நேற்று அதிகாலை 1:00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சிட்னி நோக்கிப் புறப்பட்டது.

எயார்பஸ் ஏ 330 ரகத்தைச் சேர்ந்த இந்த விமானத்தில், சம்பவத்தின் போது 217 பயணிகள் மற்றும் 16 விமானப் பணியாளர்கள் பயணம் செய்துள்ளனர்.

விமான நிலையத்துக்கு அருகாமையில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக விமானத்தின் மீது மின்னல் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இதனையடுத்து, பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில், விமானி பயணத்தை இடைநிறுத்தி அதிகாலை 1:40 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் விமானத்தை மீண்டும் பாதுகாப்பாகத் தரையிறக்கினார்.

பாதிக்கப்பட்ட பயணிகளை சிட்னிக்கு அழைத்துச் செல்வதற்காக, சிறீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் அதே ரகத்தைச் சேர்ந்த மற்றொரு எயார் பஸ் ஏ-330 விமானத்தை ஏற்பாடு செய்தது. குறித்த மாற்று விமானம் நேற்று காலை 6:06 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்பட்டது.

இதனிடையே, மின்னல் தாக்குதலுக்குள்ளான விமானம், மேலதிக பரிசோதனைகள் மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக கட்டுநாயக்கா விமான நிலையத்திலுள்ள சிறீலங்கன் எயார் லைன்ஸ் ஹங்கருக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# குழந்தை தொழிலாளர்கள் குறித்து கடந்த ஆண்டு 516 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூன். 13

2025ஆம் ஆண்டில் குழந்தை தொழிலாளர் முறை தொடர்பாக 516 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய குழந்தை பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

குழந்தை தொழிலாளர்கள் தொடர்பாக 173 முறைப்பாடுகள், குழந்தைகள் கடத்தல் தொடர்பாக 53 முறைப்பாடுகள் மற்றும் குழந்தைகளை யாசகம் எடுக்க வைப்பது தொடர்பாக 287 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

குழந்தைகளை வீட்டு வேலைகள், தெரு வியாபாரம், போதைப் பொருள் விற்பனை, யாசகம் மற்றும் விபசாரம் உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது சட்டப்படி குற்றமாகும் என அதிகார சபை எச்சரித்துள்ளது.

மேலும், குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு ஆபத்தான 71 வகையான வேலைகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நான்கு மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன். 13

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, இலங்கையின் நான்கு மாவட்டங்களுக்கு முதற்கட்ட (மஞ்சள் நிற) மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின்படி, நேற்று முற்பகல் 4.00 மணி முதல் இன்று முற்பகல் 4.00 மணி வரையான அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு இந்த எச்சரிக்கை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பின்வரும் மாவட்டங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழும் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர்:-

களுத்துறை மாவட்டம்: பாலிந்தநுவர

கண்டி மாவட்டம்: தொழுவ

நுவரெலியா மாவட்டம்: அம்பகமுவ

இரத்தினபுரி மாவட்டம்: பெல்மதுடுல்ல, அயகம, இரத்தினபுரி, கொடகவெல, கலவான மற்றும் நிவித்திகல. (அ)

# சான் விஜயலால் டி சில்வா பிணையில் செல்ல அனுமதி

கொழும்பு, ஜூன். 13

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக கைது செய்யப்பட்ட தென் மாகாண முன்னாள் முதலமைச்சர் சான் விஜயலால் டி சில்வாவை கொழும்பு நீதவான் நீதிமன்றம், பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

கொழும்பு நீதவான் அலங்க எஸ். போதரகம, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களை பரிசீலித்ததன் பின்னரே இந்த உத்தரவைப் பிறப்பித் தார்.

அதன்படி, சந்தேகநபர்தலா 5 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல நீதவான் உத்தரவிட்டார்.

மேலும், சந்தேகநபருக்கு வெளிநாட்டுப் பயணத் தடையையும் விதித்த நீதவான், அவரது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (அ)

# கல்விச் சீர்திருத்த கொள்கைக் கட்டமைப்பு பணிகளை விரைவாக நிறைவு செய்யுங்கள்!

## ஜனாதிபதி அநுரகுமார அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூன். 13

உத்தேச கல்விச் சீர்திருத்தக் கொள்கைக் கட்டமைப்பு உருவாக்கப் பணிகளை ஒரு மாத காலத்திற்குள் நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.



தேசிய கல்வி ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட கல்விக் கொள்கை கருத்துப் பத்திரம் தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றபோதே ஜனாதிபதி இவ்வறிவுறுத்தலை வழங்கினார்.

தற்போதைய கல்விச் சீர்திருத்தங்களானது முன்பள்ளிக் கல்வி, பொதுக் கல்வி, உயர் கல்வி, தொழிற்துறைக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, டிஜிற்றல் கல்வி மற்றும் முறைசாராக் கல்வி ஆகிய அடிப்படைகளின் கீழ் முன்னெடுக்கப்படுவதாக தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் இதன்போது தெரிவித்தார்.

இதுவரை நாட்டில் நிலவிய கல்வி முறைமை, அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் அவற்றின் மூலம் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. அந்த கல்விச் சீர்திருத்தங்கள் குறித்து மீளாய்வு செய்து, அதிலிருந்து வெளிப்படும் முக்கிய விடயங்கள் தொடர்பில் புதிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பைத் தயாரிக்கும் போது கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளின் போது, கொள்கையொன்றைத் தயாரித்து அதற்கமைய கல்வித்துறையை மாற்றுவதற்குப் பதிலாக, கல்வியுடன் தொடர்புடைய நிறுவனங்களின் பொறுப்புகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.


மேலும் புதிய கல்விச் சீர்திருத்தக் கொள்கைக் கட்டமைப்பைத் தயாரிக்கும் போது எழக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ள சமூக சவால்களை ஆழமாக மீளாய்வு செய்து, புதிய சமூகத்திற்குப் பொருத்தமானதொரு பிரஜையை உருவாக்குவதற்குத் தேவையான விடயங்களை புதிய கொள்கைக் கட்டமைப்பில் உள்ளடக்குவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிழக்கு மாகாண ஆளுநரை சந்தித்தார் சுவிஸ் தூதுவர்!

## அபிவிருத்தி திட்டங்கள் குறித்து ஆராய்வு



திருமலை, ஜூன். 13

சுவிற்சர்லாந்து தூதுவர் சிறிவோல்ட்டுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகரவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள், சுற்றுலாத்துறை, மீன்வளத்துறை மற்றும் விவசாயத்துறையின் மேம்பாடு தொடர்பான விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மேலும், கிழக்கு மாகாணத்தில் நிலவும் காணி தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது. காணி பிரச்னைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் இலங்கை அரசும், ஜனாதிபதியும் விசேட கவனம் செலுத்தி வருவதாகவும், மாகாண சபையும் மத்திய அரசும் இணைந்து காணி பிரச்னைகளைத் தீர்க்கும் செயன்முறையை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் ஆளுநர் விளக்கமளித்தார்.

இலங்கையின் தொழில்துறை மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், முதலீட்டாளர்களுக்கு சாதகமான சூழல் தற்போது உருவாக்கப்பட்டுள்ளமை பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் சமூக ஒற்றுமை மற்றும் இனங்களுக்கிடையேயான சமாதானம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. தற்போதைய இலங்கை அரசு முன்னெடுத்து வரும் ஊழலற்ற ஆட்சி குறித்து தூதுவர் பாராட்டுத் தெரிவித்தார்.

தூதுவரின் இலங்கையிலான பணிக்காலம் இன்னும் சில மாதங்களில் நிறைவடையவுள்ள நிலையில், தனது உத்தியோகபூர்வ பணிகளை நிறைவு செய்து நாட்டை விட்டு புறப்படுவதற்கு முன்னர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# நாட்டின் நீர்நிலைகள் வற்றும் அபாய நிலை!

கொழும்பு, ஜூன். 13

எதிர்வரும் எல் நினோ கால நிலை மாற்றம் காரணமாக இலங்கையில் கடுமையான வறட்சி ஏற்படும் பட்சத்தில், குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக கடல் நீரை சுத்திகரித்து பயன்படுத்துவது குறித்து பரிசீலிக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மேலதிக செயலாளர் கே.ஜி.பி. தர்மதிலக்க, இம்முறை எதிர்பார்க்கப்படும் எல் நினோ நிலைமை முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகக் கடுமையாக இருக்கக்கூடும் என தெரிவித்தார்.

தன் தாக்கம் காரணமாக நாடு முழுவதிலும் உள்ள பிரதான நீர்நிலைகள் வற்றிப்போகும் அபாயம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய சூழ்நிலையை எதிர்கொள்வதற்கு முன்கூட்டியே தயாராக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், அவசர காலங்களில் குடிதண்ணீர் விநியோகத்திற்காக தேசிய அனர்த்த முகாமைத்துவ சேவை மையத்திடம் உள்ள நீர் விநியோக வாகனங்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், நாங்கள் இதற்கு முன்னர் இப்படியொரு எல் நினோ நிலைமையைக் கேள்விப்பட்டதில்லை. இதற்காக நாம் பெருமளவில் தயாராக வேண்டியிருக்கும். பொதுவாக, மழைக் காலத்தில் தேசிய அனர்த்த முகாமைத்துவ சேவை மையத்தின் மூலம் ஒரு மாதத்திற்கு நாடு முழுவதற்கும் எம்மால் நீர் விநியோகம் செய்ய முடியும்.

ஆனால், இந்த எல் நினோ நிலைமை ஏற்பட்டால், பெருமளவில் நீரை விநியோகிப்பதற்கு தற்போதுள்ள நீர் விநியோக வாகனங்கள் போதுமானதாக இருக்காது. நீர்நிலைகள் முற்றாக வற்றிப்போகக்கூடும் என்பதால், நீரைப் பெற்றுக்கொள்வதற்குக் கூட ஆதாரங்கள் இல்லாமல் போகலாம். அத்தகைய சூழ்நிலையில், கடல் நீரைச் சுத்திகரித்து விநியோகிப்பது குறித்தும் நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கும்" என அவர் தெரிவித்தார். (அ)

# 600 பொலிஸார் கொல்லப்பட்டு 36 வருட ஞாபகார்த்த நிகழ்வு



அம்பாறை, ஜூன். 13

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த சுமார் 600 பொலிஸார் படுகொலை செய்யப்பட்டு 36 ஆண்டுகள் நிறைவடைந்ததை அனுஸ்டிக்கும் முகமாக நிகழ்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் அமைந்துள்ள ரணவிரு ஞாபகார்த்த நினைவு தூபியில் நடைபெற்றது.

1990 ஜூன் 11 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட 600 பொலிஸ் அதிகாரிகளின் நினைவாக அமைதி என்ற பெயரில் இம்மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள், பொலிஸார், ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்லவினால் பொலிஸ் கொடி அரைகம்பத்தில் ஏற்றப்பட்டதுடன் உயிர்நீர்த்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (அ)

# சாய்ந்தமருது பிராந்திய பாடசாலைகளில் நுண்போசனை விற்றமின் வழங்கும் திட்டம்

அம்பாறை, ஜூன். 13

மாணவர்களின் போசாக்கு நிலையை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் இரண்டாம் கட்ட நுண்போசனை விற்றமின் வழங்கும் வேலைத்திட்டம், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சில பாடசாலைகளில் நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்டது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் வழிகாட்டலின் கீழ் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் இச்செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன்போது, மாணவர்களுக்கு தேவையான நுண்போசனை விட்டமின்கள் வழங்கப்பட்டதுடன், அவற்றை முறையாக உட்கொள்வதன் முக்கியத்துவம், போசாக்கு குறைபாடுகளைத் தடுப்பதில் அவற்றின் பங்கு மற்றும் உடல்நல நன்மைகள் தொடர்பாக பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மாணவர்களின் ஆரோக்கியமான உடல் மற்றும் மன வளர்ச்சி, நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பு, கற்றல் திறன் மற்றும் கல்விசார் செயல்திறன் மேம்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# கிழக்கு மாகாண நிர்வாகம் மிகப் பலவீனமடைந்துள்ளது!

## இம்ரான் எம்.பி. கூறுகிறார்



திருமலை, ஜூன். 13

வினைத்திறனற்ற நியமனங்களால் இந்த அரசாங்கத்தில் கிழக்கு மாகாண நிருவாகம் மிகவும் பலவீனமடைந்துள்ளது என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

கிழக்கு மாகாண சபை நிர்வாகம் மிகவும் பலவீனமடைந்துள்ளதால் அதன் இணையத்தளம் எந்தவிதமான இற்றைப்படுத்தலுமின்றி இருக்கின்றது. இதனால் பொதுக்களால் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாக எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள தொடர்புகளில் சுமார் இரு வருடங்களுக்கு முன் அங்கிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றவரின் பெயர் உள்ளது. பாலர் பாடசாலைப் பணியகத் தொடர்பு தகவல்களில் தவிசாளருடைய பெயரைத் தவிர வேறு எவரது பெயரும் இல்லை. தகவல் உத்தியோகத்தர் யார் என்பது கூட இல்லை.

அதே போல சுகாதார அமைச்சு தொடர்புப் பட்டியலில் அங்கிருந்து சில மாதங்களுக்கு முன் இடமாற்றம் பெற்றுச் சென்ற திட்டமிடல் பணிப்பாளரின் பெயர் இன்னும் உள்ளது.

இதேபோல பெரும்பாலான தொடர்பு இலக்கங்கள் இன்னும் இற்றைப்படுத்தப்படாமல் உள்ளன.

கிழக்கு மாகாணத் தலைமைத்துவம் நிர்வாக விடயங்களில் மிகவும் பலவீனமானதாக இருப்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. கிழக்கு மாகாண சபை நிர்வாகத்திலுள்ளவர்கள் ஊடகங்களில் தம்மைக் காட்டிக் கொள்வதில் உள்ள அக்கறை உள்ளக நிர்வாகங்களில் இல்லை. இதனால் பொதுமக்கள் தான் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்-என்றார். (அ)




# அம்பாறையில் கடும் மழை!



அம்பாறை, ஜூன். 13

அம்பாறை மாவட்டத்தில் கோடை வெப்பத்தின் பின்னர் திடீர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன் சுழல் காற்று, மின்னல், கடல் கொந்தளிப்பு என்பனவும் ஏற்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் மாலை பல்வேறு இடங்களில் குறித்த மழை காரணமாக மரங்கள் உடைந்துள்ளதுடன் பலத்த காற்று காரணமாக சிறு சேதங்களும் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, நிந்தவூர், காரைதீவு, மாவடிப்பள்ளி, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, கல்முனை, நாவிதன்வெளி, மருதமுனை, பெரிய நீலாவணை, மல்வத்தை போன்ற பிரதேசங்களும் தாழ்நிலப் பகுதிகளிலுள்ள சில வீட்டுத்திட்டங்களும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் திடீர் கனமழையால் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன் வீதிகள் பலவும் நீரில் மூழ்கி வருகின்றன. மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் தாழ் நிலப் பிரதேசங்கள், வீடுகள், வீதிகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கக் கூடிய அபாயமும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உள்ளூராட்சிமன்றங்களை...

தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது நிலையியற் கட்டளை 27 / 2 இன் கீழ் கேள்விகளை முன்வைத்து மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜி.அலெக்ஸ்ராஜா, 27.05.2026 ஆம் திகதியன்று, பதுளை மாவட்ட சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே இவர் யாழ்ப்பாணத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும்,இப்போது பதுளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுளள்ளார். இந்த இடமாற்ற முடிவின் பின்னணியில் ஏதோவொரு வெளிப்புறக் காரணிகள் செல்வாக்கு செலுத்தியுள்ளன என்று உணர்கின்றோம்.

இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் 30.05.2026 ஆம் திகதியன்று, ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில், நீதிபதியின் இடமாற்றத்திற்கு வழிவகுத்த செயல்முறைகளில் வட மாகாண ஆளுநர் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரின் தலையீடுகள் மற்றும் தேவையற்ற அழுத்தங்கள் இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நீதிபதி அலெக்ஸ்ராஜா பருத்தித்துறை நகர சபைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட விசாரணையை இடைநிறுத்தி இரண்டு ரிட் வழக்குகளில் இடைக்கால உத்தரவுகளை வழங்கியிருந்தார். அத்துடன், அவர் கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய போது ஆசிரியர் ஒருவரின் இடமாற்றத்தையும் இடைநிறுத்தியிருந்தார். இந்த உத்தரவுகள் அனைத்தும், எதிர்மனுதாரராக பெயரிடப்பட்டிருந்த ஆளுநருக்குப் பாதகமானவையாக அமைந்திருந்தன.

இந்த மூன்று வழக்குகளின் வழக்கு ஆவணங்களின் பிரதிகள், இடமாற்றம் உத்தரவிடப்படுவதற்கு முந்தைய நாள் பிரதம நீதியரசரால் முறையற்ற முறையில் கோரப பட்டதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையைச் சேர்ந்த தவிசாளர்களைக் கொண்ட பருத்தித்துறை நகர சபை மற்றும் சாவகச்சேரி நகர சபை ஆகியவை, மத்திய அரசாங்க கட்சியின் விருப்பங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக கடந்த சில மாதங்களாக ஆளுநரால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி நிறுவனங்கள் மீதான விசாரணை அதிகாரம், நகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 184 இன் படி மாகாண உள்ளூராட்சி அமைச்சரிடமே உள்ளது. இந்த அரசாங்கம் மாகாணத்திற்கான தேர்தல்களை நடத்த மறுக்கும் அதே வேளையில், எதிர்க்கட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் பணிகளை முடக்குவதற்கு வட மாகாண ஆளுநரின் அலுவலகத்தை அரசாங்கம் பயன்படுத்தி வருகிறது.

இது தொடர்பில் சில கேள்விகளை எழுப்புகின்றேன். அதாவது, யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியால் ரிட்/006/2026 மற்றும் ரிட்/008/2026 ஆம் இலக்க வழக்கு எண்களில் வழங்கப்பட்ட சில உத்தரவுகள் தொடர்பாக, வட மாகாண ஆளுநர் நீதிச் சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பிய விடயங்கள் நீதிக்கட்டமைப்பின் நிர்வாகத்தில் தேவையற்ற தலையீடாகும் என்பதை நீதி அமைச்சர் ஏற்றுக்கொள்வாரா?

ஆம் எனின், நீதிக்கட்டமைப்பின் நிர்வாகத்தில் தேவையற்ற தலையீட்டை மேற்கொண்டமைக்காக ஆளுநருக்கு எதிராக அரசாங்கம் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் மற்றும் இந்த நிலைமையைச் சரிசெய்வதற்கு அவர் எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் என்ன என்பதை நீதி அமைச்சர் இந்தச் சபைக்கு அறிவிப்பாரா?-என்றார். (அ)

## இராணுவமே...

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும் அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில் அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே உள்ளன.

இந்நிலையில் தமது 651 ஏக்கர் வரையிலான காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படவில்லை. காணிகளை விடுவிக்குமாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில் , நேற்றும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அதேவேளை, எதிர்வரும் 15ஆம் திகதி இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து 37 வருடங்கள் பூர்த்தியடையும் நிலையில் அன்றைய தினம் மாவட்ட செயலகம் முன்பாக பாரிய போராட்டத்தை முன்னெடுக்கக் காணி உரிமையாளர்கள் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சொல்லிசை பாடகரை...

நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியதை அடுத்து , அவரை எதிர்வரும் 17ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டு இருந்தது.

இந்நிலையில், இளைஞனை விடுதலை செய்யுமாறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன் , உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதேவேளை நேற்று முன் தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வாறான நிலையில் இளைஞனுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அல்லாது, தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு 120 இன் கீழ் முன்னெடுக்குமாறு சட்டமா அதிபர் பொலிஸாருக்கு பணித்திருந்தார்.

அதனை அடுத்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்து இளைஞன் சார்பில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்ட நிலையில், உரிய ஆவணங்கள் மன்றுக்கு கிடைக்காத காரணத்தால் , பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

ஆனாலும் மீண்டும் நகர்த்தல் பத்திரம் ஊடாக மீண்டும் பிணை விண்ணப்பம் செய்யப்பட்ட நிலையில், இளைஞனை பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது.

(அ)

## போராடியவர்களுக்கு...

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்ப ட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அல்லாது, தண்டனை சட்டக்கோவை பிரிவின் கீழ் வழக்கை முன்னெடுக்குமாறு பொலிஸாருக்கு சட்டமா அதிபர் பணித்திருந்தார்.

இந்நிலையில் , குறித்த வழக்கை நகர்த்தல் பத்திரம் ஊடாக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை அழைத்தபோது , சட்டத்தரணிகளின் பிணை விண்ணப்பத்தை அடுத்து பாடகர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பிணையில் விடுதலையாகிய பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

என்னைப் பிணையில் விடுதலை செய்துள்ளார்கள். எனது விடுதலைக்காக குரல் கொடுத்த மக்களுக்கும், ஜனாதிபதிக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்-என்றார்.

(அ)

## வடமராட்சிக்கு...

குறித்த கலந்துரையாடலில் வடமராட்சிப் பிரதேசத்துக்கு பொதுவான தீயணைப்பு அலகு ஒன்றினை ஆரம்பிக்கவேண்டும். அதனை வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி) பிரதேச சபையானது, இப்பிரதேசத்திற்கான தீயணைப்புப் பிரிவை நிறுவுவதற்கான வசதிகளையும், பிரதேசத்தின் அனைத்து பகுதிகளையும் குறுகிய காலத்தில் அணுகுவதற்கேற்ற வகையில், வடமராட்சியின் மத்திய பகுதியில் அமைந்துள்ளது.

எனவே, குறித்த சபையில் தீயணைப்புப் பிரிவை உருவாக்குவதும், அதற்கான ஒத்துழைப்பை வடமராட்சியில் உள்ள ஏனைய சபைகள் வழங்குவது பொருத்தமானதென தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், வடமராட்சிப் பிரதேசத்திற்கான ஒன்றிணைந்த திண்ம மற்றும் திரவக் கழிவு முகாமைத்துவத்தினை ஏற்படுத்த வேண்டும்.

திண்மக்கழிவு முகாமைத்துவத்தில் தற்போது வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை உக்கக்கூடிய கழிவுகளை பசளையாக்கும் திட்டத்தை செயற்படுத்தி வருகின்றபோதும், அதன் முழுக் கொள்ளளவில் இயங்கப்போதுமான மூலப்பொருள்கள் கிடைப்பதில் சவால்களை எதிர்கொண்டுவருகிறது.

இந்நிலையில், எல்லா உள்ளூராட்சிச் சபைகளும் ஒரேவிதமான கழிவகற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதைத் தவிர்த்து, ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபையும் ஒவ்வொரு செயற்பாட்டை வினைத்திறனாக கழிவுகளை முகாமைத்துவம் செய்ய முடியும்

அத்துடன் சுற்றுச்சூழலுக்கும் மக்களுக்கும் நன்மைபயக்கும் செயற்பாடாக அமையும் எனவும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

(அ)

## தெற்கில் அரசியல்...

சட்டத்தின் கீழ் தமிழ் பாடகர் சங்கீத்சன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதை நாங்கள் கண்டிக்கிறோம். அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கோருகிறோம்.

இந்தக் கைது நடவடிக்கை நீதியானது அல்ல. இது தமிழர்களின் அரசியல், கலாசார மற்றும் கலைசார் வெளிப்பாடுகள் மீதான மற்றொரு தாக்குதலாகும்.

பல தசாப்தங்களாக, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த எங்கள் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்குப் பதிலாகவோ அல்லது வடக்கு-கிழக்கில் இராணுவமயமாக்கல், நில ஆக்கிரமிப்பு மற்றும் ஒடுக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் பதிலாக, இலங்கை அரசு தமிழர்களின் குரல்களைத் தொடர்ந்து ஒடுக்கி வருகிறது.

17 ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலைப் புலிகள் பற்றிப் பேசுவது என்பது, சிங்கள மக்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்கி தெற்கில் அரசியல் ஆதரவைப் பெறுவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு அரசியல் தந்திரம் என்று நாங்கள் கருதுகிறோம். ஆயுத மோதல் 2009 இல் முடிவுக்கு வந்துவிட்டது. இன்று செயல்படும் நிலையில் விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லை. இருப்பினும், தமிழ் கலைஞர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் குடும்பத்தினர் இன்றும் எதிரிகளாகவே நடத்தப்படுகிறார்கள்.

தமிழ் மக்கள் தொன்றுதொட்டு வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். சுயநிர்ணய உரிமை மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசக் கோட்பாடுகளின்படி, எங்கள் மக்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமை எங்களுக்கு உண்டு என்று நாங்கள் நம்புகிறோம்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஜனநாயக நாடுகள் ஆகியவை அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம். சர்வதேச சமூகமும் உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் தமிழர்களும் எங்களுடன் துணை நின்று, ஒடுக்குமுறையிலிருந்து தமிழர்களை மீட்க உதவுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்-என்றனர்.

(அ)

## சாலேயின்...

மோசமடைந்து வருவதால் அவரது உயிருக்கு கணிசமான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டனர்.

இதேவேளை, சுரேஷ் சாலே தொடர்பாக அஸ்கிரிய விகாரையின் மகாநாயக்க தேரர், கலாநிதி வரகாகொட சிறீ ஞானரதன மகாநாயக்க தேரரும் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

சுரேஷ் சாலேயின் மனைவி அஸ்கிரிய விகாரைக்கு சென்று, தனது கணவர் சார்பாகக் கோரிக்கை விடுத்ததாக அந்தக் கடிதத்தில் மகாநாயக்க தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தன் கணவருக்கு ஏதேனும் நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க உதவுமாறு அவர் கேட்டுக்கொண்டதாகவும், அந்த வேண்டுகோளை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு சாலேயின் மனைவி கேட்டுக்கொண்டதாகவும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர் ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளார்.

(அ)

## சமூக மாற்றப்...

கஷ்டப்பட்டு தன் பிள்ளைகளை வளர்த்தெடுத்தவர் அந்தத் தாய்.

ஆனால், இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்ட ஒரு சில அரசியல் பின்னணி கொண்ட சட்டத்தரணிகள், சங்கீத்சன் ஊடாகத் தங்களது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள முயன்றனர்.

சங்கீத்சன் ஒரு திறமையான பாடகர். அவர் தொடர்ந்து சமூக மாற்றத்தை நோக்கிய எழுச்சிப் பாடல்களைப் பாட வேண்டும்.

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் பெற்றோரை இழந்த பிள்ளைகளும், காணாமல் போனவர்களின் குடும்பங்களும் அதிகம் உள்ளனர். அவர்களின் துயரங்களை உலகறியச் செய்யச் சங்கீத்சன் தனது குரலைப் பயன்படுத்த வேண்டும்.

கிளிநொச்சியில் இன்று பாரியளவில் மதுபானச்சாலைகளும், கசிப்பு மற்றும் கஞ்சா போன்ற போதைப்பொருள் புழக்கமும் அதிகரித்துள்ளது. போதைப்பொருள் பிடியில் சிக்கியுள்ள எமது மாவட்ட இளைஞர்களை மீட்பதற்காகச் சங்கீத்சன் தனது பாடல்கள் மூலம் குரல் கொடுக்க வேண்டும்.

இன்று சங்கீத்சனைப் பற்றி உலக நாடுகள் பலவற்றிலும் உள்ள மக்கள் என்னோடு பேசுகின்றனர். அந்தளவிற்கு அவருக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. ஆனால், இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திச் சில தவறான நபர்கள் அவரைத் தவறான வழிக்குக் கொண்டு செல்ல முயலலாம்.

அதற்கு இடம் கொடுக்காமல், நாட்டின் நலனையும், மக்களின் வாழ்வாதாரத்தையும் கருத்திற்கொண்டு, ஒரு நல்ல பிள்ளையாகச் சஞ்சீஸ்வரன் ஆரோக்கியமான பாதையில் பயணிக்க வேண்டும் - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# குருந்தூர் மலையில் இந்துக் கோவில் இருந்தமைக்கான சான்றுகள் இல்லை!

## தொல்பொருள் பணிப்பாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன். 13

முல்லைத்தீவு, குருந்தூர் மலையில் இந்து கோவில் இருந்ததற்கான சான்றுகள் எதுவும் வெளிப்படவில்லை என பதில் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் ஆர். ஏ.செனரத் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு மேலதிக செயலாளர் (நிர்வாகம்) தேசிய மரபுரிமைகள் பிரிவின் ஊடாக, பதில் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் ஆர். ஏ. செனரத் விக்கிரமசிங்க விடுத்துள்ள அறிவிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிவிப்பின் பிரதி சாக்கிய புத்திர தர்ம அமைப்பின் பிரதி செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்பின்படி,

முல்லைத்தீவு குருந்தூர்மலை விகாரையின் மறுசீரமைப்பு என்ற போர்வையில், ஐயனார் கோவிலை தொல்பொருள் மரபுரிமை சிதைவடையும் வகையில் புனரமைப்பது தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரால் அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பாக,

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக உங்களால் எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட, உங்களது இல. எம்.பி.ஆர்.சி.ஏ. /07/வேறு மற்றும் 2026.03.20ஆம் திகதியிட்ட கடிதத்துடன் தொடர்புடையது.

அதற்கமைய, எனது இதே இலக்கத்தைக் கொண்ட மற்றும் 2026.03.30 ஆம் திகதியிடப்பட்டு முல்லைத்தீவு பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் மூலம், மேற்குறிப்பிட்ட குருந்தூர்மலை விகாரை அமைந்துள்ள நிலமானது, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பௌத்த சான்றுகளைக் கொண்ட ஒரு இடமாகும். அங்கு ஒரு இந்து கோவில் இருந்ததற்கான சான்றுகள் எதுவும் வெளிப்படவில்லை.

மேலும், 1940 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க தொல்பொருள்கள் கட்டளைச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் பிரகாரம், தொல்பொருள் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு நிலப்பரப்பிற்குள் ஏதேனும் ஒரு புதிய கட்டடத்தையோ அல்லது நிர்மாணத்தையோ மேற் கொள்வது சட்டவிரோதமானது என்பதுடன், அது 34 ஆம் பிரிவின் கீழ் தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும்.

அதேபோன்று, அத்தகையதொரு பௌத்த மதத் தலத்துக்குள் ஒரு இந்து கோவிலை நிர்மாணிப்பதன் மூலம், ஏதேனும் ஒரு தரப்பினரால் புனிதமாகவும் கௌரவத்துடனும் மதிக்கப்படும் ஒரு குழுவினரை தூண்டும் வகையில் செயல்படுவது, மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 31 (ஆ) பிரிவின் கீழ் ஒரு குற்றமாகும்.

அதற்கமைய, மேற்குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் இவ்விடத்தில் ஒரு இந்து கோவிலை நிர்மாணிப்பதற்கோ அல்லது புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கோ அனுமதி வழங்க முடியாது என்பது அறிவிக்கப்பட்டுள்ளதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளருக்கு என்னால் அனுப்பி வைக்கப்பட்ட அக்கடிதத்தின் பிரதியொன்றை உங்களது மேலதிக புரிதலுக்காக இத்துடன் இணைத்துள்ளேன் என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன் -என்றுள்ளது.

(அ)

# வடமாகாண சுகாதாரத்துறையை மேம்படுத்துவது குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன். 13

வடக்கு மாகாண சுகாதாரத்துறையை மேம்படுத்தும் நோக்கில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பான விசேட மீளாய்வுக் கூட்டம், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

மாகாணத்திலுள்ள ஆதார மருத்துவமனைகளில் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், சத்திரசிகிச்சைக் கூடங்களை நவீனமயப்படுத்தல், டிஜிற்றல் மயப்படுத்தப்பட்ட நோயாளர் தரவு மையங்களை நிறுவுதல் மற்றும் உட்கட்டமைப்புத் திருத்த வேலைகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் தெல்லிப்பழை (130 மில்லியன் ரூபா), பருத்தித்துறை (58.5 மில்லியன் ரூபா), சாவகச்சேரி (50 மில்லியன் ரூபா) மற்றும் ஊர்காவற்றுறை (43.5 மில்லியன் ரூபா) ஆகிய ஆதார மருத்துவமனைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், பெரும்பாலான வேலைத்திட்டங்களுக்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ளன.

அத்துடன், முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி (17 மில்லியன் ரூபா), மாங்குளம் (20.5 மில்லியன் ரூபா) மற்றும் புதுக்குடியிருப்பு (35 மில்லியன் ரூபா) மருத்துவமனைகளுக்குச் சத்திரசிகிச்சைக் கூடங்கள், கண் மருத்துவக் கிளினிக்குகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், கிளிநொச்சி முழங்காவில் ஆதார மருத்துவமனைக்கு 36.5 மில்லியன் ரூபாவும், வவுனியா செட்டிக்குளம் ஆதார மருத்துவமனைக்கு 54.3 மில்லியன் ரூபாவும், மன்னார் முருங்கன் ஆதார மருத்துவமனைக்கு 36.73 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

உலக வங்கியின் நிதியுதவியுடனான ஆரம்ப சுகாதார கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 14 பொதிகளில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றில் 5 பொதிகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. எஞ்சிய திட்டங்களுக்கான மதிப்பீடுகளைத் தயாரித்து இரு வாரங்களுக்குள் திட்ட அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை வடக்கு மாகாணத்தின் ஏனைய திணைக்களங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கும், இத்திட்டத்துக்குத் தேவையான தொழில்நுட்ப ஆளணிகளை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான நிதி ஒதுக்கீட்டை இதே திட்டத்திலிருந்தே பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கையை உடனடியாக முன்வைக்குமாறும் ஆளுநரால் பணிப்புரை விடுக்கப்பட்டது.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது. மன்னார் மாவட்ட மருத்துவமனையின் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிப்பதற்கான கேள்விப்பத்திரங்களைத் தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், அவை மிக விரைவில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(அ)




# வெருகல் படுகொலையின் 40 ஆவது ஆண்டு நினைவு

திருமலை, ஜூன். 13



திருகோணமலை - வெருகல் படுகொலையின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வெருகல் - பூநகர் தான்தோன்றீஸ்வரர் ஆலய வளாகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதனை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது பூசை வழிபாடுகள் இடம்பெற்று படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்காக, ஆத்ம சாந்தி வேண்டி ஒரு நிமிட மௌன பிரார்த்தனை இடம்பெற்றது. இதன் பின்னர் உயிரிழந்தவர்களின் திரு உருவப்படங்களுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வெருகல் - ஈச்சிலம்பற்று அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்காக அத்தியவசிய உணவுப் பொருள்களை ஏற்றிவரும் வழியில் அரச அதிகாரிகள் மூன்று பேர் உட்பட 21 பொதுமக்கள் சேருவில- மஹிந்தபுர பகுதியில் வைத்து ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

1986.06.12 அன்று இடம்பெற்ற இந்த படுகொலை சம்பவத்தை நினைவு கூரும் வகையில் இந்த நினைவேந்தல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## அதிக சத்தம் எழுப்பும் சைலன்சர் கொண்ட வாகனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

கொழும்பு, ஜூன். 13

பொது வீதிகளில் அதிக சத்தத்தை எழுப்பும் வகையில் மாற்றியமைக்கப்பட்ட சைலன்சர்களைப் பொருத்தி வாகனங்களை ஓட்டும் சாரதிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இவ்வாறு அதிக சத்தத்தை எழுப்பும் வாகனங்களை பொலிஸார் கையகப்படுத்துவார்கள் என பொலிஸ் போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவின் தலைவர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

இவ்வாறான வாகனங்களை ஓட்டும் சாரதிகள் எதிர்காலத்தில் போதைப்பொருள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என அவர் குறிப்பிட்டார்.

சம்பந்தப்பட்ட வாகனங்கள் குறித்து மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடம் இருந்து அறிக்கை பெறப்பட்டு, அதன் பின்னர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் சேனாதீர மேலும் தெரிவித்தார்.

(அ)

# பிள்ளையானும் சாலேயும் விடுவிக்கப்படக்கூடாது!

## கோடீஸ்வரன் எம்.பி. சபையில் கோரிக்கை

கொழும்பு, ஜூன். 13

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள பிள்ளையான் மற்றும் சுரேஷ் சாலே ஆகியோர் விடுவிக்கப்படக்கூடாது. உண்மை வெளிவர வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் சபையில் தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் உண்மை வெளிவருவதற்கு இலங்கை தமிழரசுக் கட்சி முழுமையான ஒத்துழைப்பு வழங்கும். கைது செய்யப்பட்டுள்ள பிள்ளையான் மற்றும் சுரேஷ் சாலே ஆகி யோர் விடுவிக்கப்படக்கூடாது. உண்மை வெளிவர வேண்டும்-என்றார்.

## பரந்தன் பொதுச்சந்தையில் மரம் விழுந்து கடை சேதம்!

கிளிநொச்சி, ஜூன். 13

கடும் காற்று காரணமாக கிளிநொச்சி - பரந்தன் பொதுச் சந்தையில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் மீது பாலை மரம் முறிந்து வீழ்ந்ததில் வர்த்தக நிலையம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இந்த நிலையில் வர்த்தக நிலையம் மீது முறிந்து வீழ்ந்த பாலை மரம் வெட்டி அகற்றப்பட்டது.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media